குற்றவியல் நீதிமன்றம்

763 திரு. மா. மணிமாறன்;

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாகளுக்கு விடையளிப்பாரா :

(அ) நன்னிலத்தில் குற்றவியல் நீதிமன்றம் இயங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கருத்துரு ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றவியல் நீதிமன்றங்களில் நடுவர் இல்லாத நீதிமன்றங்கள் எத்தனை? எப்போது புதிய நீதிபதிகள் நியமிக்கப்படுவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

9-20 மணி

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்றாலும் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். கிட்டத்தட்ட 64 இடங்கள் காலியாக இருப்பதாக அறியப்படுகிறது. அரசாங்கம் இது குறித்து உயர் நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்டு இப்போது 64 இடங்களுக்கும் தேர்வு நடைபெறவேண்டுமென்று தேர்வு ஆணைக் குழுவிற்கு அறிவுறுத்தியிருக்கிறது. கோடை விடுமுறைக்குள்ளாக அந்தத் தேர்வு நடைபெறும் என்று நம்புகிறேன்.

கோவை மத்திய சிறை

*1809 திரு. மு. இராமநாதன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா :

(அ) கோவை மத்திய சிறையில் உள்ள ஆலையில் நூற்பு மற்றும் நெசவுப் பிரிவுகள் தற்போது இயங்கி வருகிறதா?

(ஆ) ஆம் எனில், என்னென்ன பிரிவுகள் இயங்கி வருகின்றன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நூற்பு ஆலை இயங்கவில்லை. நெசவுப் பிரிவு மட்டும் இயங்கி வருகிறது,

(ஆ) நெச ப்பிரிவு, சாப பிரிவு, தையல் பிரிவு மற்றும் கைத்தறி பிரிவுக இயங்கி வருகின்றன.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டு ஒன்றுக்குச் சராசரியாக இந்த ஆலையின் மூலம் உற்பத்தி செய்யப்படுகிற துணியின் மதிப்பு எவ்வளவு என்பதையும், செலவுகள் நீங்கலாக ஆண்டு ஒன்றுக்குக் கிடைக்கும் இலாபம் எவ்வளவு என்பதையும், இந்த ஆலையை நவீனப்படுத்தி உற்பத்தியைப் பெருக்க அட்வைசரி போர்ட் என்ற வகையிலே குழு அமைக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.எஸ்.ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையின் மூலம்1988 ஆம் ஆண்டு கணக்குப்படி நெசவுத் தொழில் மூலம் கிடைக்கும் தொகை 1,36,13,060 ரூபாய். கொடுக்கப்படுகிற கூலி மிகக் குறைவு, முதலில் சிறை வாசிகளுக்குக் கொடுக்கப்பட்ட கூலி, அதாவது தினக்கூலி ஸ்கில்ட் லேபரார்ஸ்-க்கு ஒரு ரூபாய், அன்ஸ்கில்ட் லேபரார்ஸ்-க்கு 50 பைசா மற்றவர்களுக்கு 25 பைசா என்றிருந்தது. இப்போது நம்முடைய அரசு வந்ததற்குப் பிறகு அதாவது 1989ஆம் ஆண்டிலிருந்து ஸ்கில்ட் லேபரார்ஸ்-க்கு 2 ரூபாயும், அன்ஸ்கில்ட் லேபரார்ஸ்-க்கு ஒரு ரூபாயும், மற்றவர்களுக்கு 50 பைசாவும் கொடுக்கப்படுகிறது. எனவே இதிலே நல்ல முறையில் இலாபம் வந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொரு கேள்வியையும் கேட்டார்கள். நவீனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டார்கள். தேவைப்பட்டால் அட்வைசரி போர்ட் அமைத்து கருத்துக்களைக் கேட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே கோவை மத்திய சிறைச்சாலையில் இருக்கிற நூற்பு ஆலை நீண்ட காலமாகப் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இருந்து இயங்கிக் கொண்டிருந்தது. அமைச்சர் அவர்களின் பதிலில் நூற்புப் பிரிவு நிறுத்தப்பட்டு விட்டது என்றும், இதர பிரிவுகள் தான் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன என்றும் சொன்னார்கள். குறிப்பிட்ட தொழில் நுட்ப மேற்பார்வையாளர்கள் தவிர இந்த மத்தியச் சிறையில் உள்ள நூற்பாலைகளில் இருக்கின்ற நெசவுப் பிரிவில் ஆண்டுக் கணக்கில் தண்டனை அடைந்த கைதிகளும், ஆயுள் தண்டனைக் கைதிகளும்தான் தொழிலாளர்களாகப் பணிபுரிந்து வருகிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள்

சொன்ன கணக்கைப் பார்த்தால் மிகவும் குறைந்த அளவுக்குத் தான் அவர்களுக்கு ஊதியம் கொடுக்கப்படுகிறது என்பது தெரிகிறது. எனவே, நியாயமான ஊதியம் வழங்கவும், மேற்கொண்டு அங்கே உற்பத்தியைப் பெருக்கவும், கைதிகளின் வாழ்வில் ஒளி ஏற்றி வைக்கவும் அரசு ஒரு சீர்திருத்தச் சட்டம் கொண்டு வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்கள் இந்தக் கோவை மத்திய சிறைக்குப் பல தடவை போய் இருக்கிறார்கள், என்னைவிட அதிகமாக அவர்கள் அங்கே சென்றிருக்கிறார்கள். எனவே அங்கே இருக்கின்ற ஆலையின் பூர்வாங்க சரித்திரம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இங்கே கொடுக்கப்பட்ட குறிப்பில் 1929—ஆம் ஆண்டில் அந்த ஆலை ஆரம்பிக்கப்பட்டது என்று தெரிகிறது. அது சரிவர இயங்காத காரணத்தால்தான் 1980 ஆம் ஆண்டு சில பகுதிகள் மூடப்பட்டன என்று குறிப்பு இருக்கிறது. அங்கே வேலை செய்கிற சிறைவாசிகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு 'ரிகரஸ் இம்ப்ரிசன்மென்ட்' என்று சொல்லப்படுகிற கடும் உழைப்பு கொடுக்கப்படுகிறது. அந்த உழைப்பின் மூலமாக அவர்களுக்கும் ஓரளவுக்கு ஊதியம் கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல் இந்தப் பிரச்சினையைக் கவனித்து தேவைப்பட்டால் ஊதியத்தை உயர்த்தலாம்.

திரு. கே. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சிறையில் இருக்கும்படியான மில்லில் முன்பு நூற்புப் பிரிவும் இருந்திருக்கிறது. இப்போது Weaving Section என்று சொல்லப்படுகின்ற நெசவுப் பிரிவு மட்டும்தான் இருக்கிறது. இன்றைக்கு அங்கே ஒரு கோடி ரூபாய்க்கு மேலான துணிகள் உற்பத்தி ஆகின்றன. நமது அரசின் தேவைக்குப் பயன்படுகின்ற காக்கி டிரில் துணி முழுவதும் அங்கேதான் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் இந்த நூலை விலைக்கு வாங்குவதால், பெரும் கொள்ளை லாபம் அடிக்கக்கூடிய முதலாளிகள் நிர்ணயிக்கின்ற விலைக்குத்தான் வாங்கவேண்டி இருக்கிறது. ஆகவே ஒரு Spinning Section இப்போதாவது ஏற்படுத்துவதற்கும், அந்த ஜெயிலில் இருக்கும்படியான கைதிகள் விடுதலையாகிப் போகக்கூடிய நாளில் இந்தப் பயிற்சியினை முடித்துப் போகின்ற அளவில் அவர்களுக்குப் பயன்படுகின்ற வகையிலும் அதாவது அந்தத் தொழிலில் அவர்களுக்கு ஒரு பயிற்சி கொடுக்க உதவும் என்ற அடிப்படையிலும் ஒரு Spinning Section உருவாக்குவதற்கான முயற்சியை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

9-25 மணி

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிறைச்சாலையில் 71 சென்டிமீட்டர் அகலம் உள்ள டெரிகாட்டன் துணி மீட்டர் ஒன்றுக்கு 20 ரூபாய் வீதம் அரசுத் துறைகளுக்கு வழங்கப்படுகிறது.

வெளிமார்க்கெட்டில் உள்ளதை விட 6 ரூபாய் குறைவாக இருக்கிறது. அதுபோலவே ஆஸ்பத்திரிகளுக்கு, மருத்துவ மனைகளுக்கு 'காஸ்' துணி மீட்டர் $3\frac{1}{2}$ ரூபாய் வீதம் கொடுக்கப் படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, இந்த ஸ்பின்னிங் செக்ஷன் ஆரம்பித்தால் நல்ல பலனைத் தரும். இப்போது மாடர்னைசேஷன் போன்று பல திட்டங்களை வகுத்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள். பிரச்சினை நிதிப் பிரச்சினை. அந்த நிதிப் பிரச்சினையைச் சமாளித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோன்று இந்த ஆலையைப் புதுப்பிக்கவும் விரிவுபடுத்தவும் முயற்சியை எடுத்துக்கொள்வோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மத்திய சிறையிலே உள்ள இந்த நூற் பாலையின் நெசவுப் பிரிவிலே பணி செய்கின்ற ஆயுள் கைதிகள் எத்தனை பேர்? அவர்களுக்கு ஆண்டுதோறும் லாபத்திலே பங்கீடு செய்து கொடுக்கப்படுகிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாபத்தில் பங்கீடு ஒன்றும் கொடுப்பது இல்லை. இந்த ஆலையிலே இருக்கின்ற பல பிரிவுகளிலே சாயப் பிரிவில் 32 பேர், தச்சுப் பிரிவில் 22 பேர், தையல் பிரிவில் 44 பேர், டேரா பிரிவில் 15 பேர், புத்தகங்கள் கட்டும் பிரிவில் 6 பேர், கைமுறி காகிதப் பிரிவில் 17 பேர், கைத்தறி பிரிவில் 51 பேர், கருமார் பிரிவில் 5 பேர், கொதிகலன் பிரிவில் 10 பேர் என்று பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறையிலே மில்லிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு போனஸ் சட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறதா? போனஸ் கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போனஸ் பணமாக கொடுக்கப் படுவது இல்லை. போனஸ் 'லீவாகக்' கொடுக்கப்படுகிறது.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மிக அதிகமான நாட்கள் சிறைச்சாலையிலே இருந்திருக்கிறார்கள். அந்தச் சிறைச் சாலையில் ஆயுள் கைதிகளுக்கும் ஏனைய கைதிகளுக்கும் நிரம்ப வேறுபாடு உண்டு. ஆகவே வழக்கமாகக் குற்றம் செய்வதைத் தொழிலாகக் கொண்டவர்கள், மற்றவர்கள் ஏதோ ஒரு திடீர் ஆவேசத்தில் மானம் மரியாதைக்காக கொலை செய்துவிட்டு வருபவர்கள், ஆயுள் கைதிகள் அவர்களைத் தனியாகப் பிரித்து வைத்து தனிச் சிறைச்சாலையில் ஆயுட்கைதிகளை வைத்து இங்கு

நூற்பாலை போன்ற பல தொழிற்சாலைகளை உண்டாக்கி அவர்களுடைய வாழ்க்கையில் அந்தத் தண்டனை என்பது வாழ்நாள் முழுவதும் வேதனைப்படுகிற மாதிரி இல்லாமல் வாழ்க்கைக்கு ஒரு தொழில் கல்வி அவர்களுக்குக் கிடைக்கின்ற வகையில் செய்து, அங்கே பணியாற்றுகின்ற நேரத்தில் அவர்கள் வெளியிலே இருக்கின்ற சம்பளத்தில் பாதி அளவுக்காவது கொடுக்க அரசு முயற்சி செய்யுமா? அவர்கள் விடுதலை ஆகி வெளியே போகும்போது அவர்களுக்குக் கிடைக்கின்ற அந்த சர்டிபிகேட்டை வைத்து, கட்டாயமாக, ஆலைகளில், பலதொழிற்சாலைகளில்அவர்களுக்குச் சில விகிதாசாரத்தில் வேலை கொடுக்க வேண்டும் என்ற ஆணையை அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை நல்ல யோசனை. இப்போதுகூட அங்கே சிறையிலே இருக்கின்றவர்கள் படிப்பதற்கு அனுமதி கேட்டால், பி.ஏ. படிப்பதற்கு, சட்டம் படிப்பதற்கு, டாக்டர் படிப்பு படிப்பதற்கும் அனுமதி கொடுக்கப்பட்டு அவர்கள் எஸ்கார்ட் இல்லாமலேகூட அனுப்பி வைக்கப்படுகிறார்கள். அப்படிப் போய் வருகிறார்கள். மேலும் சிறைச்சாலையிலே சில பிரிவுகள் இருக்கின்றன. அந்தப் பிரிவுகளில் தேர்ச்சி அடைந்தால் அவர்கள் விடுதலை அடைந்த பிறகு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்ற நிலைமை இருக்கிறது. இப்போது நாம் அதிகாரிகளை வற்புறுத்தி வருகிறோம். குறைந்தபட்சம் சில பேர்களையாவது அவர்கள் சிறையிலேயிருந்து வந்த பிறகு வேலையிலே அமர்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். குறிப்பாக கோயம்புத்தூர், மதுரை, திருச்சி போன்றபகுதிகளிலே வேலைவாய்ப்புகள் உண்டு. அந்த வேலை வாய்ப்புகளைப் பெற்றுத் தருவதற்கு நம்முடைய இலாகா முயற்சித்துக் கொள்ளவேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்காகச் சொல்கிறேன். சிறைச்சாலையிலே இருந்து ஒருவர் விடுதலையான பிறகு நம்முடைய விண்ணமங்கலத்தில் இருக்கின்ற லெதர் தொழிற்சாலையில் வேலை வாய்ப்புப் பெற்று பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திறந்தவெளி சிறைச்சாலைகள் அமைக்கின்ற செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா? அப்படி அமைக்கும் எனில் அது எங்கெங்கே அமைக்கும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது திறந்தவெளி சிறைச்சாலை சிங்கநல்லூரில் மட்டும் இருந்து வருகின்றது. திறந்தவெளி சிறைச்சாலை என்பது நல்ல ஒரு கொள்கை. அந்தக் கொள்கையை நிறைவேற்ற அரசு முயன்றுவருகிறது.